உ

சிவமயம்.

மதுரைக்

கண்ணங்கூத்தனார் செய்த

# கார் நாற்பதும்.

இஃது

உரையுடன்

சண்முகசுந்தரமுதலியா

ரவர்களாற் பரிசோதித்து

திரிசிரபுரம் புத்தகவியாபாரம்

சபாபதிபிள்ளை

யவர்களது

மட்டுவார்குழலாம்பாள் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

மிதுனரவி.

சிந்தாத்திரிப்பேட்டை சாமிநாயக்கர் வீதி -௪௧- நெம்பர்

சங்கமருவியாப்பினெலாங்கீழ்க்கணக்காவன
நாலடிநான்மணிநானாற்பதைந்திணைமுப்
பால்கடுகங்கோவைபழமொழி-மாமூல
மெய்ந்நிலைகாஞ்சியோடேலாதியென்பவே
கைந்நிலையவாங்கீழ்க்கணக்கு.

வெண்பாவாம்.

உ

சிவமயம்.

# கார் நாற்பது மூலமும் உரையும்.

பொருகடல்வண்ணன்புனைமார்பிற்றார்போற் ... *
றிருவில்விலங்கூன்றித்தீம்பெயறாழ ... ... ... *
வருதுமெனமொழிந்தார்வாரார்கொல்வானம் ... *
கருவிருந்தாலிக்கும்போழ்து. ... ... ... ... *

(தோழி தலைமகட்குப் பருவங்காட்டி வற்புறீஇயது)

எ-து பொருகடலினதுநிறம்போன்ற நிறத்தினை யுடையான் புனைந்தமார்பிற் பூமாலைபோல விந்திரவி ல்விலங்காகவூன்றி யினியபெயல்விழாநிற்க வருவே மென்றுசொலலினார் வாராரோ மழைகருக்கொண்டி ருந்து துளிகளைவிடாநின்றகாதலான். (க)

கடுங்கதிர்நல்கூரக்கார்செல்வமெய்த
நெடுங்காடுநேர்சினையீனக்-கொடுங்குழாஅய்
இன்னேவருவர்நமரென்றெழில்வானம்
மின்னுமவர்தூதுரைத்து.

(இதுவுமது.)

எ-து பகலோனுடைய கடுங்கதிர்கள்வறுமையு றக் கார்காலஞ்செல்வமுற நெடியகாடெல்லாமிகப்பய

ன்றரக் கொடுங்குழையையுடையாய் நமரிப்பொழுதே வருவரென் றெழிலையுடையமுகின் மின்னுகின்ற தவர் தூதாயறிவித்து. (௨)

வரிநிறப்பாதிரிவாடவளிபோழ்ந்து
யிரமணற்றண்புறவினாலி-புரள
வுருமிடி வானமிழிய வெழுமே
நெருநலொருத்திதிறத்து.

(பருவங்கண்டழிந்த தலைமகளாற்றல்வேண்டி
தோழிதனதாற்றாமைதோன்றவுரைத்தது.)

எ-து வரிநிறத்தையுடையபாதிரிப்பூ வாடும்வகை காற்றூடறுக்கப்பட்டிளமணலையுடையதண்புறவின்கணாலங்கட்டிபுரள வுருமிடிக்குமுகிலிழிதராநின்றதெழாநின்றது. நெருநற் றையலாளொருத்திமாட்டு வருந்துவான்வேண்டி-எ-று. அல்லது உநெருநற்றே தொடங்கித் தனியாண்மாட்டென்றுமாம். (௩)

ஆடுமகளிரினமஞ்ஞையணிகொள
காடுங்கடுக்கைகவின்பெறப்பூத்தன
பாடுவண்டூதும்பருவம்பணைத்தோளி
வாடும்பசலை மருந்து

(பருவங்காட்டித்தலைமகளைவற்புறுத்தியது.)

எ-து கூத்தாடுமகளிரேபோல மயில்களழகுபெறக் காடுகளுங்கொன்றைகளானழகுபெறப் பூத்தன

அப்பூக்களைப்பாடுவண்டுகளூதாநின்றன, ஆதலாற்ப னத்தீதாளி வாடும்பசலைக்குமருந்திப்பருவம்-எ-று(

இகழுநர்ச்சொல்லஞ்சிச்சென்றார்வருதல்
பகழிபோலுண்கண்ணாய் பொய்யன்மையீண்டைப்
பவழஞ்சிதறியவைபோலக்கோபம்
தவழுந்தகையபுறவு.

(இதுவுமது)

எ-து இகழ்வார்சொலலஞ்சிப் பொருட்குச் சென்றார்வருதலம்பு போன்றவுண்கண்ணாய் பொய்யன்மையாம். இவ்விடத்துச் சிதறியபவழம்போலக் கோபங்கள்பரக்குந்தகைமையையுடையவாயின காடுகளா கலான். (௬)

தொடியிடவாற்றாதொலைந்ததோணோக்கி
வடுவிடைபோழ்ந்தகன்றகண்ணாய்வருந்தல்
கடிதிடிவானமுரறு நெறியிடைச்
சென்றாரைநீடின்மினென்று

(இதுவுமது.)

எ-து வளையிடுதற்குச்சம்பாவாய்த் தளர்ந்ததோளை நோக்கி மாவடுவினடுவேபோழ்ந்தாற்போல வகன்ற கண்களையுடையாய்வருந்தாதொழி, கடிதிடிக்குமழை முழங்காநின்றது கொடியவழிச்சென்றாரை நீடாதொழி யினென்றுசொல்லி—எ-று. (௭)

நச்சியார்க்கீதலுநண்ணார்த்தெறுதலுந்
தச்செய்வான்சென்றார்தருஉந்தளிரியலாய்
பொச்சாப்பிலாதபுகழ்வேள்வித்தீப்போல
வெச்சாரு மின்னு மறை.

(இதுவுமது.)

எ-து தம்மைநச்சியார்க்கீதலும் பகைவரைக்கெ டுத்தலும் இவ்விரண்டுந்தம்மை நிலைநிறுத்துவனவாக நினைத்துப்பொருட்குச்சென்றாரைக் கொண்டுவருக த ளர்ந்தவியல்பினையுடையாய் மறப்பில்லாதபுகழையுடை ய வேள்வித்தீப்போல வெம்மருங்குமின்னுகின்றமழை— எ-று, (எ)

மண்ணணியன்றாலத்துமன்னும்புகழ்வேண்டிப்
பெண்ணணியனலலாய்பிரிந்தார்வரல்கூறுவ
கண்ணணியஞ்சனந்தோய்ந்தபோறகாயாவு
நுண்ணரும்பூத்த புறவு.

(இதுவுமது.)

எ - து மண்ணுலகத்துநிற்கும்புகழைவே ண்டியபெண்ணணியல்லையுடையநல்லாய் நலமாயபொ ருட்குப்பிரிந்தார் வருதலைச்சொல்லாநின்றது, கண்ணணி ற்பெய்யப்பட்ட வஞ்சனத்தைத்தோய்ந்தனபோலக்கா யாக்களும் நுண்ணியவரும்புகளை மலரப்பட்டபுறவுக ள்—எ-று. (அ)

கருவிளைதண்மலர்போற்பூத்தனகார்க்கேயுந்
தெரிவணப்புற்றனதோன்றி-வரிவளை
முன்கைபிறப்பத்துறந்தார்வரல்கூறு
மின்சொற்பலவு முரைத்து.

(இதுவுமது.)

எ-து கருவிளைகளுந் தண்மலர்போலப் பூத்தன கார்ப்பருவத்திற்கெதிர்ந்தெரியினது வனப்பையுற்றன தோன்றிப்பூக்களும் வரியையுடையவளைகண் முன்கையினின்றுநீங்க வின்சொற்பலவுமுரைத்துப்போயினர் வருதலை [illegible]ன்றனை. (௯)

வானேறுவானத்துரற்றவயமுரா
ணேனற்றெருத்தலதனோடெதிர்செறுப்ப
கான்யாற்றொலியிற்கடுமான்றேரொன்றோழி
மேனிதளிர்ப்பவரும்.

(இதுவுமது.)

எ - து மழையேறு முகிலின்கணின்றொலிப்ப வலியையுடையானைபுருடைய வானேறுநியவொருத்தலவ்வுருமேற்றொடெதிராகிவெகுளாக் கான்யாற்றொலிபோலகக்கடுமாவாற்பூட்டியகாதலர்தே ரொன்றுடையதோழிநின்மேனிதளிர்ப்பவாராநின்றது—எ-று. (௰)

புணர்தருசெல்வந்தருஞ்சிக்குச்சென்றார்
வணரொலிவையம்பாநயலவருதல்கூறு

மண்ணீர்த்தெழும்பாம்பினறலைபோற்புணர்கோடல்
பூங்குலையீர்ந்தபுறவு.

(இதுவுமது.)

எ-து பொருந்தியசெல்வத்தைக் கொளவேண்டிச்சென்றார்வரைந்துதஞ்ழத் தலைவமபாலினையுடையாள் விரைந்துவருதலைக்கூறுகின்றன, வண்ணங்கெழுந்தபாம்பின்படம்போலப் பொருந்திய கோடல்களாற்பூங்குலையீனப்பட்டபுறவுகள்—எ-று-ஐம்பால்-பெண்மயிர்.(கக)

மையெழிலுண்கண்மயிலன்னசாயலா
யையந்தீர்காட்சியவர்வருதறிண்ணிதா
நெய்யணிகுஞ்சரம்போலவிருங்கொண்மூ
வைகலும்மேரு வலம.

(இதுவுமது.)

எ-து மையையுமெழிலையுமுடையவுண்கண்ணாய் மயிலன்னசாயலாய் ஐயந்தீர்ந்தவறிவினையுடைய நங்காதலர் வருதல்மெய்ம்மை, நெய்யணிந்தயானைகள் போலப்பெரியமுகில்களுடோறுமவலமாகவெழாநின்றவாதலான். (கஉ)

ஏந்தெழில்லல்குலாயேமார்ந்தகாதலர்
கூந்தல்வனப்பிற்பெயருமவேந்தர்
களிறெறிவாளரவம்போல்கண் வல்லி
யொளிறுடுமின்னு மழை.

(இதுவுமது.)

எ-து. அழகினையுடைய வேந்தியவல்குலினையுடையாய் துணைபோடு புணர்ந்தின்பமுற்றகாதலராகிய மகளிர்கூந்தலழகுபோலப்பெய்ய வரசர்களிற்றமறவெறிந்தவாளரவம்போலக்கண்டார் கண்ணைவவ்வியொளிவிட்டுமின்னுகின்றதுமழை ஆதலான்வருவர். (கங)

செலவுந்தரல்வேண்டிச்சென்றநங்காதலர்
வல்லேவருதறெளிந்தாம்வயங்கிழாய்
முல்லையிலங்கெயிறீனநறுந்தண்கார்
மெல்லவினிய நகும்.

(இதுவுமது.)

எ-து செல்வந்தேடிக்கொள்ளவேண்டிப்போயினநங்காதலர்மீளாந்துவருதலைத்தேறினும்விளங்காநின்றவணிகளையுடையாய் முல்லைக்கொடிகண் (மகளி)ரிலக்கெயிறுபோலவீனும்வகை யழகியகுளிர்ந்தமுகில்கள்மெல்லவினியவாகவொலியாநின்றன. (கச)

திருந்திழாய்காதலர்தீர்குவரல்லர்
குருந்தின்குவியிணருள்ளுறையாகத்
திருந்திளிவண்டொடவிருந்துமயி
லயின் குழலூதும்பொழுது.

(இதுவுமது.)

எ-து திருந்தியவணிகளையுடையாய் நங்காதலர்

நம்மைமீள்குவரல்லர் குருந்தினதுகுவிந்தவிணரினி டமே தனக்குறையுளாகவிருந்து திருத்தியினிதாயிருக் குதினியென்னும்பண்ணைவண்டுகளபாடப் பெரியதும் பிசுனியகுழல்போனுதாகின்றவிக்காலத்தின்கண். ()

கருங்குயில்கையறமாமயிலாலப்
பெருங்கலிவானமுரறும்பெருந்தோ
ளசோகினிளந்தளிரன்னநின்மேனிப்
பசலைப்பழங்கண்கொளல்.

(இதுவுமது.)

எ - று கருங்குயில்கள்செயலற்றுத்துன்பமுறமா மயில்களகளித்தாடும்வகை பெரியகளிப்பையுடைய மே கமுழங்காநின்றது பெருந்தோளினையுடையாய் நின தசோகின்தளிரன்னமேனியிற் பசந்தபசலை மெலிவு கொண்டாம்படி—எ-று. பழங்கண்-மெலிவு. (கக)

அறைக்கலிருவரைமேற்பாம்புசவட்டிப்
பறைக்குரலேறொடுபௌவம்பருகி
யுறைத்திருள்கூர்ந்தன்றுவானம்பிறை
பிறைத்தகைகொண்டன்றுபேதைநுதல்

(இதுவுமது.)

எ - று கடலினைப்பருகிப் பறையொலிபோன்றி ருக்குமொலியையுடையவுருமேற்றொடுநின்று பாம்புக ளைவருத்தி யுறைக்கலிருவரைமேற்பெய்திருள்மிக்கு

இவ் வாகலாற்பிறையின்றகைமையைக்கொண்டதே தாயினைதுறதல்—எ-று. (கஎ)

கல்பயில்கானங்கடந்தார்வரவாங்கே
நல்லிசையேறொடுவானநமிறப்பச்
செல்வர்மனைபோற்கவினீன்றநல்கூர்ந்தார்
மேனிபோற்புல்லென்றகாடு.

(இதுவுமது.)

எ-து மலைநெருங்கியகானத்தைக்கடந்துபோயி னார்வருமவகை யவர்வருங்காலமுலந்தவாறே மிக்கவோ சையையுடையவுருமேறுடனேமேகங்களுலங்கக்கெல் லாமொப்பநிறலாற்செல்வர்துமனைபோலவழகைத்த கதனமுன்புநல்கூர்ந்தார்மேனிபோலப்புல்லென்றிருந் தகாடுகள்—எ-று. (கஅ)

நாஞ்சில்வலவனிறம்போலபூஞ்சினைச்
செங்கான்மராஅந்தகைந்தனபைங்கோற்
றொடிபொலிமுன்கையாடோடுணையாவேண்டி
நெடுவிடைச்சென்றதென்னெஞ்சு.

(வினைமுற்றியதலைமகன்பாகற்குச்சொல்லியது.)

எ-து கலப்பைப்படை வென்றியையுடையவெ ள்ளியோனிறம்போலப்பூவைகொம்மையுஞ்செவ்விய தா ள்களையுமுடைய மராமரங்கள்விரிந்தனவாதலாற்பசு மையுடையகோற்றொழிற்பொலிந்தமுன்கையுடை

யா யேோன்க ளெனக்குத்துணையாகவேண்டி நெடியகானத்தைக்கடந்துசென்றதென்மனம்-எ-று. (கக)

விறுசால்வேந்தன்வினையுமுடிந்தன
வாறும்பதமினியவாயினவருமணி
நாகமுனுங்கச்செருமன்னர்சேனைத்
தான்போலச்செல்லுமழை.

எ-து சிறப்பமைந்தவேந்தனுடைய வினைகளுமுடிந்தன, வழிகளுஞ்செவ்வியினவாயின, வருமணிநாகங்கள்வருந்தும்வகை யுருமேற்றோடுகூடிச்செருமன்னர்சேனைத்தானைப்போலச்செல்லாநின்றதுமுகில்- எ

பொறிமாண்புனைதிண்டேர்போந்தவழியே
சிறுமுல்லைப்போதெலலாஞ்செவ்வி-நறுநுதற்
செல்வமழைத்தடங்கட்சின்மொழிப்பேதைவாய்
முள்ளெயிறேய்ப்பவடிந்து.

(இதுவுமது.)

எ-து எந்திரச்செய்கைகளான் மாட்சிமைப்பட்டபுனைதிண்டேர்போந்தவழியே சிறுமுல்லைப்போதுகளெல்லாஞ் செவ்வியாகியவழகியநுதலையுஞ் செல்வமழைபோன்றிருந்த கண்ணினையு மெல்லியமொழியினையுமுடையபேதைவாயின்கண் முள்ளெயிறொக்கவடிவுபெற்ற-எ-று. (வின்றது-என்னும்பாடமிலை, தொக்கது

இளையருமீர்க்கட்டியரவுளையணிந்து
புல்லுண்கலிமாவும்பூட்டியநல்லா
ரிளநலம்போலக்கவினிவளமுடையா
ராக்கம்போற்பூத்தனகாடு.

(இதுவுமது.)

எ-து சேவகரு மழகிதாகக்கட்டியுதேத்தலைச்செய்ய சாமரையைத்த[illegible]ின்கணணிந்து புல்லுண்டகலிமாவினையுந்தேரோடுபூட்டுதலைச்செய்யும்வகை நல்லாராகியமகளிரிளநலம்போலவழகுபெற்று வருவாயுடையாருடையசெல்வம்போலப்பூத்தனகாடு-எ-று. (உஉ)

கண்டிரணமுத்தங்கடுப்பப்புறவெல்லாந்
தண்டுளியாலிபுரளப்புயல்கான்று (லோ
கொண்டெழில்வானமுங்கொண்டன்றெவன்கொ
லொண்டொடியூடுநிலை.

எ. து தோழிதலைமகட்குப் பருவங்காட்டிவற்புறுத்தியது-எ-று.' (உக.)

எல்லாவினையுங்கிடப்பவெழுநெஞ்சே
கல்லோங்குகானங்களிற்றின்மதநாறும்
பல்லிருங்கூந்தல் பணிநோனாள்கார்வான்
மெல்லவுந்தோன்றுஞ் செயல். (உ௩)
கருங்காலவாகின்போரிப் போபவரும்
விர்பக்தீர்த்தண்புறவிற்றெறுவிமலர்ந்தன

சேர்ந்தனைசெய்குறைவாராவனைது
கூர்ந்தபசலையவட்கு. (௨௫)

நலமிகுகார்த்திகைநாட்டவரிட்ட
தலைநாள்விளக்கிற்றகையுடையவாகிப்
புலமெலாம்பூத்தனதோன்றிசின்மொழி
தூதொடுவந்தமழை. (௨௬)

முருகியம்போல்வானமுழங்கிஇரங்க
குருகிலைபூத்தனகானம்பிரிவெண்ணி
யுள்ளாதகன்றாரென்றுடியாம்பாராட்டிப்
பள்ளியுட்பாயுட்பசப்பு. (௨௭)

இமிழிசைவானமுழங்கக்குமிழின்பூப்பொன்செய்
குழையிற்றுணராதூங்கத்தன்பதஞ்செல்வி
யுடையதாநெஞ்சேகாதலியூர
நல்லைவயமுங்கச்செலற்கு. (௨௮)

பொங்கருஞாங்கர்மலர்ந்தனதாங்காக்
கைவலன்கொன்றாலும்பகைகொண்ட
வெவ்வத்திசைகளும்வந்தனறாநாளுஞ்
செவ்வியுடையசுரம். (௨௯)

வரைமல்கவானஞ்சிறப்பவுறைபோழக
திருவிலநிமபெயருழத்திவானற
வூதையுமருகறுக்தணைகாவேப்பதை
பெருமடமாட்டுரைத்து. (௩0

கருஞ்செனிக்கத்தானைகளுக்கினிர்ச்சேர்ந்த
தெருமைமெழிலேபெறியவர்ஞுடிச்
செருமிருமள்ளரிற்செம்மாக்குஞசெவ்வி
இருதுதமகியாளுசெய்குறி. (௧௧)
காலோடக்கொண்டகெடாஅப்புகழ்வேட்கைச்
செல்வர்மனம்போற்படாது
மகிழ்வண்டுபாண்முரலுங்கானம்
பிடாஅப்பெருந்தகைகற்கு. (௧௨)
கடனீர்முகந்தகமஞ்ஞூலெழிலி
குடமலையாகத்துக்கொளளபற்கு
மிடமெனவாங்கேகுறிசெயதேம்பேதை
மடமொழியெவ்வங்கெட. (௧௩)
விரிதிரைவெள்ளம் வெறுப்பப்பருகிப்
பெருவிறல்வானம்பெருவரைசேருங்
கருவணிகாலங்குறித்தார்திருவணிந்த
வொண்ணுதல்பாதர்திறத்து. (௧௪)
சென்றநகைகாதலர்சேணிகந்தாரொண்ணணி
யொன்றியநோயோடிடும்மைபலகூர
வென்றிமுரசினிர்ன்ஙெழிலவான
இனறுமிரங்குமிவட்கு. (௧௫)
சிரல்வாய்வனப்பினவாஇகிரலொப்ப
நீர்ந்தண்டளவந்தகைத்தனசேர்த்தக்க

செல்வமழைமதர்க்கட்சின்மொழிப்பேதையூர்
கல்லீந்ததாகநமக்கு. (கசு)

கருங்கடன்மேய்ந்தகமஞ்சூலெழிலி
யிருங்கன் றுவரையேறியுயிர்க்கும்
பெரும்பதக்காலையும்வாரார்கொல்வேந்த
னருந்தொழில்வாய்த்தநமர் (கஎ)

புகர்முகம்பூழிபுரளவுயரி
நிலைவெஞ்சினவேழம்பிடியோடிணைதாழத்
தண்பதக்காலையும்வாராரெவன்கொலோ
வொண்டொடியூடுநிலை. (கஅ)

அலவன்கணேய்ப்பவரும்பீன்றவிழ்ந்த
கருங்கானொச்சிப்பசுந்தழைசூடி
யிரும்புனமேர்க்கடிகொண்டார்பெருங்கவலை
யாகின்றுநம்மூரவர்க்கு.

(இதுவுமது.)

எ-து அலவனது கண்ணினையேய்ப்பவரும்பினை யீன்று பின்மலர்ந்த கருங்கதிரினையுடைய நொச்சிப்பசுந்தழையைச்சூடிப்பெரும் புனங்களையுமவர்புதிதாகவே, குழுவிக்கத்தொடங்கினார்கள் ஆதலானம்மூரின்கட்பெரியவலராயிற்று நங்காதலராகியவர்க்கு—எ-று. (கசூ)

வருதனஞ்செய்குறிவாராரவரென்று
நொந்தவொருத்திக்குநோய்தீர்மருந்தாகி.

*விறந்தின்கருவண்ணங்கொண்டெழில்வான்
கநதுமென்பேதைநுதல்.*

எ-து பருவங்காட்டித்தலைமகளைத்தோழிவற்புறுத்தியது. அவர்செய்குறிகளாறுந்தன, அவர்வருகிலரென்று தேர்ந்தவொருத்தியாகிய நினக்குநோய் தீர்க்குமருந்தாகியநதின்கனியினிறம்போலக் கருநிறத்தைக்கொண்டெழில்வான், மெல்லியபேதாய்நின்னுடையநுத வினியொளிபெறநந்தும்—எ-று. ஈங்கென்பதனை-யிகதென்றுகுறுக்கியது. (௪0)

கார்நாற்பதுமூலமும்உரையும்

முற்றிற்று.

இந்நூலில்-உ௩-வது செய்யுள்முதல்-௩அ-வது, செய்யுளவரைபிரதிகளிலுரைகாணப்படவில்லை. கல்விச்செல்வமிக்குடையார் தமது பிரதிகளிலுளதாயதெரிவிப்பாராயின (உ) வது முறையச்சிடுவதுடன் அச்சிடுத்தெரிவிப்போர்பெயரையும வெளியிடப்படும்.

இங்ஙனம்,

கொ-சண்முகசுந்தரமுதலியா